
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1295

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# பொய்ப்பெட்டி

**கோவி.லெனின்**

124

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# குற்றவாளிகளை உத்தமர்களாக்கும் உன்னத அரசாங்கம்!

***எம்.ஜி.ஆரையும் ஜெயலலிதாவையும் புனிதர்களாகக் காட்டுவதற்காக, கலைஞர் மீதும் தி.மு.க. மீதும் அவதூறு பரப்பும் வேலைகளை இன்றும் சிலர் தொடர்கிறார்களே?***

இந்திய அரசியலில் கலைஞரைப் போல ஒரு அரசியல் தலைவரை, இனி காண முடியாது. ஐம்பதாண்டுக்காலம் ஓர் இயக்கத்தைத் தலைமையேற்று வழிநடத்திச் சாதனைகள் படைத்து, சோதனையான நேரத்திலும் நெருப்பாற்றில் எதிர்நீச்சல் போட்டு, வெற்றி கண்ட ஒரே அரசியல் தலைவர் அவர்தான். கலைஞருக்குப் பிறகும் தி.மு.க. இன்றும் வலிமையாக உள்ளது. சமூக நீதியின் குரலாக நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் ஒலிக்கிறது. தி.மு.க.வின் குரலுக்கு உள்ள வலிமையினால்தான் புதிது புதிதாக உருவாகும் கட்சிகளும்கூட, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று சொல்லிக்கொண்டு தி.மு.க.வின் கொள்கைகளை எதிரொலிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. களத்தில் தி.மு.க. இல்லை என்றால், இந்தக் கட்சிகள் எதுவும் சமூக நீதியைப் பேசாது. மாநில உரிமை பற்றி வாய் திறக்காது.

தி.மு.க.வை நேரடியாக வீழ்த்த முடியாத காரணத்தால், புனித பிம்பங்களை உருவாக்கி, கலைஞர் மீதும் தி.மு.க. மீதும் இட்டுக்கட்டிய கதைகளைப் பரப்பும் கூட்டம், காலந்தோறும் உருவாகிக்கொண்டே இருக்கிறது. புதிய கட்சிகளும் அதையே செய்கின்றன. ஆனால், உண்மை நிலை என்ன? எம்.ஜி.ஆரை தி.மு.க.வின் எதிரியாக்கி, ஊழல் குற்றச்சாட்டுகளைப் பரப்பினர். எம்.ஜி.ஆர் கொடுத்த ஊழல் புகாரின் அடிப்படையில், சர்க்காரியா கமிஷன் விசாரணை நடைபெற்றது. 'விஞ்ஞான ஊழல்' என்று அந்த கமிஷன் சொன்னதாக ஒரு பொய்யை அ.தி.மு.க. உள்ளிட்ட தி.மு.க.வின் எதிரிகள் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். அப்படிப்பட்ட வார்த்தை எதுவும் சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் கிடையாது. புகார் தெரிவித்த எம்.ஜி.ஆர். தான் எந்த ஆதாரமும் கொடுக்காமல், நான் கேள்விப்பட்டதைத்தான் சொன்னேன் என்று நழுவி ஓடினார். அதே எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தபோது என்ன நடந்தது?

திருச்செந்தூர் முருகன் கோயிலில் வைரவேல் திருடப்பட்டது. அறநிலைய அதிகாரி சுப்பிரமணியப் பிள்ளை கொலை செய்யப்பட்டார். இதை, நீதிபதி பால் என்பவர் தலைமையிலான விசாரணை கமிஷன் உறுதி செய்தது. அந்த விசாரணை அறிக்கையை வெளியிடாமல் மறைத்தது எம்.ஜி.ஆர். ஆட்சி. எதிர்க்கட்சித் தலைவரான கலைஞர் அந்த அறிக்கையை வெளியிட்டு, நீதி கேட்டு மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு நெடிய நடைப்பயணம் மேற்கொண்டார். திருட்டு, கொலை, அதை மறைக்கும் முயற்சிகள்தான் எம்.ஜி.ஆர். ஆட்சியின் இலட்சணம். பல்கேரியா-போலந்து நாடுகளிலிருந்து கப்பல்கள் வாங்குவதில், எம்.ஜி.ஆர். ஆட்சியில் நடந்த ஊழல்கள், தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு விதிகளை மீறி எரிசாராயத்தைக் கடத்திச் செல்வதற்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் குடும்பமே துணை நின்றது, இந்த விவகாரத்தில் 'கிளி' என்ற பெண்மணி மேலிடம் வரை செல்வாக்கு செலுத்தியது, எரிசாராய விவகாரம் தொடர்பாக, எம்.ஜி.ஆர் அரசுமீது ஒன்றிய அரசு நியமித்த 'ரே கமிஷன்' என எம்.ஜி.ஆர். ஆட்சிக்கால விவகாரங்கள் ஏராளம் உள்ளன.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை ஊழல் ராணியாகவே பெயர் எடுத்தவர். 'டான்சி நிலம்', 'கொடநாடு எஸ்டேட்', 'ப்ளசன்ட் ஸ்டே ஹோட்டல்' என அவரது ஊழலுக்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன. சொத்துக் குவிப்பு ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு, முதலமைச்சர் பதவி பறிபோய், சிறைக்குச் சென்று ஊதுபத்தியை உருட்டியது வரை, பல சாதனைகள் நிறைந்துள்ளன. இவற்றை மறைப்பதற்காகவும் புதிய புனிதர்களைப் பொய்யாகக் கட்டமைப்பதற்காகவும், தி.மு.க. மீதும் கலைஞர் மீதும் பொய்யையும் வதந்தியையும் காலந்தோறும் பரப்புகின்றன ஆரியத்தின் கைக்கூலிகள்.

**...வினா தொடரும்.**

## மக்களின் பக்கம் நிற்கவேண்டியவர்கள்...

தூத்துக்குடியில் சாலையைச் சீரமைக்கக் கோரி, போராட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கட்சியினரைக் காவல் துறை கொடூரமாகத் தாக்கி, கைதுசெய்துள்ளது. இது தொடர்பாக, எழுத்தாளர் இக்பால் அகமது தனது கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளதுடன், த.வெ.க. அரசுக்கு மார்க்சிஸ்ட் கட்சி அளித்துவரும் ஆதரவு குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார். அவரது பதிவிலிருந்து...

"குஜிலியம்பாறை வட்டாட்சியர், உயர்கல்வித் துறை இணை இயக்குநர் உள்ளிட்ட அதிகாரிகளின் ஆணைகளைச் சுற்றியே பொதுவெளியில் விவாதங்களை வைக்கும் நம் தோழர்கள், அவர்களை ஏவும் அரசின் மீதான விமர்சனங்களை வைப்பதில்லை; கண்டுகொள்வதில்லை; மிகக் கவனமாக கடந்துசெல்கிறார்கள். காவல்துறை அத்துமீறல்களைக் கடுமையாக விமர்சிக்கும் இடதுசாரிகள், காவல் துறை அமைச்சரை விமர்சனம் செய்வது இல்லை.

ஒரு அதிகாரி டிரான்ஸ்ஃபர் செய்யப்பட்டால், அந்த இடத்தில் மற்றொரு அதிகாரிதான் உட்காருவார், அவர் மட்டும் என்ன செய்வார்? மீண்டும் சொல்கிறேன், மே மாதம் இருந்த நிலையில், இப்போது இந்த அரசு இல்லை. இந்த அரசுக்கு உண்மையில் எண்ணிக்கை அடிப்படையில், இடதுசாரி உறுப்பினர்கள் நான்கு பேர் இல்லாமலேயே பெரும்பான்மை இருக்கிறது. இடதுசாரிகள் தாங்களாகவே, இந்த அரசு தங்கள் ஆதரவால் நிலைத்து நிற்கிறது என்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்.

234 இடங்களில் 7 இடங்கள் இப்போது காலியாக உள்ளன. பெரும்பான்மைக்குத் தேவை 114 இடங்கள் மட்டுமே. த.வெ.க.-107, காங்.-5, வி.சி.க.-2, இ.யூ.முஸ்லிம் லீக்-2 ஆக மொத்தம் 116. தேவைக்கு அதிகமாகவே 2 இடங்கள் உள்ளன. இதில் கம்யூனிஸ்ட்டுகள் நான்கு பேர் எங்கே இருக்கிறார்கள் அல்லது அவர்களின் அவசியம் எங்கே இருக்கிறது?

தொடர்ந்து காவல் துறை அத்துமீறல்கள், ஜனநாயக வழியில் போராடுகின்ற மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், விவசாயிகள், தொழிலாளிகள் என யாரையும் இந்த அரசு விட்டுவைப்பதில்லை. உத்தரப்பிரதேசத்தில் இருந்து தமிழகப் போக்குவரத்துத் துறைக்கு, கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் வருவார்கள் எனில், இந்த அரசின் பின்னால் இருந்து இயக்குபவர்கள் யார்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். 'மக்களின் பக்கம் நிற்க வேண்டியவர்கள் மார்க்சிஸ்ட்டுகள்' என்பதை அந்தக் கட்சியினரே மாநிலக் குழுவுக்கு நினைவூட்டுகின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்



ப.கந்தசாமி



### இந்தி எதிர்ப்புக் காலத்திலிருந்து கழகம்...

இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்திலிருந்து கழகத்தில் இருந்து வருகிறேன். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகி இருக்கிறேன். இந்தப் படம், கழக நிகழ்ச்சிக்காக சேலம் வந்த தலைவருடன் எடுக்கப்பட்டது. இப்போது, எனக்கு 85 வயதாகிறது. கழகத்தில் இளந்தலைமுறையினர் ஆற்றலுடன் செயல்பட்டுவருவதைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது.

**– ப.கந்தசாமி, ஓய்வுபெற்ற ஆசிரியர், மகுடஞ்சாவடி, மேனாள் தி.மு.க. இலக்கிய அணித் தலைவர், சேலம் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# வலை யோசை



**Marudhu**

அரசு கஜானாவில் பணம் காலி ஆகிவிட்டது. பதவி ஏற்ற காலத்தில் விஜய் பேசியது. சோற்றுக்கு வழியில்லாத யாராவது இப்போது எம்.எல்.ஏ. ஆகியிருக்கிறார்களா? அவர்களுக்கு எம்.எல்.ஏ. பதவியைக் கொடுத்த அந்தக் கட்சி, அவர்களுக்கு கார் வாங்கிக் கொடுக்காதா? கார் வாங்குவதற்கு எத்தனை கோடி ஆகும்! அது யார் அப்பன் வீட்டுப் பணம்? முதலமைச்சர் தற்காலிகமாக அலுவலகம் மாறுவதற்கு எத்தனை கோடி செலவு? உல்லாச ஆட்சி! ஊதாரிகளின் ஆட்சி!



**Say Ilangovan**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைச் சொல்ல வேண்டாம்னுதான் நெனைச்சேன். 'ஆதாரம் ஆதாரம்'னு கேட்கிறாங்க. ஒன் வீக் பேக், மாண்புமிகு நிதியமைச்சர் பேசும்போது, ஒரு மூணு டிபார்ட்மென்ட்லேர்ந்து ரெவ்யூ பண்ணி, அந்த ஃபைல்களெல்லாம் என் டேபிள்ல இருக்குன்னு சொன்னாரு. அதை ஏதோ போற போக்கில் அவர் சொல்லல. உண்மையிலேயே என் டேபிள்ல இருக்கு. அத்தனையும் ப்ரூஃபோட இருக்கு. ஒப்பன் பண்ண வெச்சிடாதீங்க. எதை எப்ப ஒப்பன் பண்ணணுமோ, அப்ப கரெக்டா எல்லாமே ஒப்பன் ஆகும்.'

– இது நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் பேசியது.

சரி, அந்த ஃபைல்களெல்லாம் எப்போது ஒப்பன் ஆகும்? உண்மையிலேயே ஒப்பன் ஆகுமா அல்லது அந்தக் காலத்தில், பாம்புக்கும் கீரிக்கும் சண்டை விடுவதாகச் சொல்லி, கடைசிவரை சண்டைக்கு விடாமலேயே கூட்டத்தைக் கூட்டிய மோடி மஸ்தான் கதைதானா? எல்லாவற்றுக்கும் ஆதாரம் இருக்கிறதென்றால், ஏனிந்தத் தாமதம்? மக்களின் எதிர்பார்ப்பை எகிறச் செய்துவிட்டுப் பேசாமலிருக்கலாமா? தூய்மைக்குச் சொந்தக்காரரான நீங்கள், அழுக்குகளைப் பாதுகாக்கலாமா? இதுதான் நமது கேள்வி.




## ம..லூ..ரு..க

### ஜனநாயக முறைக்கு எதிரானது!

1949-ஆம் ஆண்டு, காங்கிரஸை விமர்சித்து பேரறிஞர் அண்ணா எழுதிய கட்டுரையில் ஒரு பகுதி, "ஆளும் உரிமையோடு அதிகாரத்தில் இருக்கும் ஒரு கட்சி, இன்னொரு கட்சியைப் பற்றிக் குறை கூறினால், அதைப் பொதுமக்கள் நம்பித் தம் வழி நிற்பர் என்ற நம்பிக்கை, ஜனநாயக முறைக்கே நேர்மாறானது. அதை உணரும் அரசியலறிவு இல்லாத காரணத்தால், எதிர்க்கட்சிகளை ஏளனமாகப் பேசித் திரிகிறார்கள்" என்று குறிப்பிட்டிருப்பார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900